



தில்லி போலீஸ், தேச ராணுவம் இரண்டுக்குமான சொந்த சகோதர சச்சரவுகள் ஒரு பக்கம் ஓடிக்கொண்டிருக்க, மறுபுறம் செங்கோட்டைத் தாக்குதல் குறித்த விசாரணைகள் ஆரம்பித்தன. நாடு முழுக்க சர்வ கட்சி சகலபாடிகள் கேள்வி கேட்டே கொன்று விடுவார்கள் என்கிறபடியால், தாற்காலிகமாகத் தம் லடாய்க்கு முற்றும் அல்லது தொடரும் போட்டுவிட்டு, தாக்குதலில் ஈடுபட்டவர்களைத் தேடும் பணியை முடுக்கிவிட்டார்கள்.

லஷ்கர். ஆம். தாங்கள்தான் தாக்குதலுக்குக் காரணம் என்று டெலிபோன் செய்து சொல்லியிருக்கிறார்கள். அதுவும் பி.பி.சி.க்கு. ஆகவே, அவர்களிடமிருந்தே தொடங்குவது தவிர வேறு வழியில்லை. தொடங்கினார்கள். அல்டாஃப் ஹுசைன். பி.பி.சி.யின் ஸ்ரீநகர் கரெஸ்பாண்டண்ட். இந்த வழக்கில் தொடக்கப் புள்ளி அவர்தான். லஷ்கரின் ஆட்கள் பி.பி.சி.க்கு போன் செய்தபோது அதை அட்டண்ட் செய்தவர்.

'அலுவலகத்தில்தான் இருந்தேன். காப்பி சாப்பிட்டுக்கொண்டே ரிப்போர்ட் எழுதிக்கொண்டிருந்தேன். ஒரு போன் கால் வந்தது. கரகரப்பான குரல். 'லஷ்கர் இ தொய்பாவிலிருந்து பேசுகிறேன்' என்று முறைப்படி அறிமுகப்படுத்திக்கொண்டுதான் பேசவே ஆரம்பித்தார் அந்த மனிதர். செங்கோட்டைத் தாக்குதல் பற்றிச் சொன்னார். முதலில் எனக்குப் புரியவில்லை. பேசிய விதம் நிதானமாகவே இருந்தாலும், விஷயம் எனக்கு உள்ளே இறங்கச் சற்று அவகாசம் பிடித்தது. யார், என்ன, ஏது என்று உள்வாங்கிக்கொண்டு நான் பதறுவதற்குள், இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

சிறிது நேரத்தில் மீண்டும் போன். அதே நபர். 'தில்லி விவகாரம் பற்றி யாரிடம் பேசவேண்டும்' என்று கேட்டார். பி.பி.சி.யின் தில்லி அலுவலக நம்பரைக் கொடுத்தேன். எழுதிக்கொண்டார். ஏன், எதனால் செங்கோட்டைத் தாக்குதல் என்று கேட்டேன். சரியாகப் பதிலளிக்கவில்லை. தகவல் சொல்ல மட்டும்தான் போன் செய்திருந்தார்களே தவிர, நான் கேட்ட வேறு எந்தக் கேள்விக்கும் பதிலளிக்கவில்லை.'

காஷ்மீரத்து பி.பி.சி. நிருபரிடம் பேசி தில்லி நம்பரை வாங்கிக்கொண்டு, அடுத்தபடியாக அங்கே போன் செய்திருக்கிறார்கள். தில்லியில் போனை எடுத்தவர் அயன்ஜத் சென் என்கிற நிருபர். அவரிடம் விசாரணை தொடர்ந்தது. சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து போன் வந்ததா? என்ன சொன்னார்கள்? 'ஆமாம், வந்தது. லஷ்கர் இ தொய்பாவிலிருந்து பேசுகிறேன் என்று சொன்னார். செங்கோட்டையில் குண்டு. அவ்வளவுதான் விஷயம். மற்ற செய்திகளை மறுநாள் காலை தெரிந்துகொள்ளலாம் என்று சொல்லி விட்டு கட் செய்து விட்டார்.'

பி.பி.சி.க்கு வரும் அத்தனை டெலிபோன் கால்களும் ரெக்கார்டரில் பதிவு செய்யப்படுவது வழக்கம். குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட நேரத்தில் யாரிடமிருந்து போன் வந்தது என்பதைக் கண்டுபிடிக்க அதிக நேரம் பிடிக்கவில்லை. அது ஒரு செல்போன் நம்பர். உரிமையாளரின் பெயர் முகம்மது ஆரிஃப் என்கிற அஷ்பக் அலி.

வெறும் பெயரை வைத்துக்கொண்டு என்ன செய்வது? வேண்டுமானால் நாம ஜபம் செய்யலாம். ரூல்டு நோட்டு வாங்கி 1008 முறை எழுதலாம். இம்மாதிரியான உத்தமோத்தமர்களெல்லாம் ப்ராப்பர் வீட்டு விலாசம், எத்தனையாவது குறுக்குச் சந்து, எப்படி வரவேண்டும், லேண்ட் மார்க் என்ன என்றெல்லாம் கொடுத்தா மொபைல் வாங்குவார்கள்?

எனவே, காவல் படையினர் தில்லியின் வரைபடத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தார்கள். ஏழைகள் அதிகம் வசிக்கும் பகுதி. முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதி. ஏழை முஸ்லிம்கள் தங்கும் பகுதி. கள்ள காரியஸ்தர்களுக்கென்றே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட குடியிருப்புப் பிராந்தியங்கள். மசூதி வளாகங்கள். ரயில்வே அவுட்டர் ஏரியாக்கள். பழைய கிரிமினல்களின் பதுங்கு தளங்கள். சித்தாந்த ரீதியில் இந்திய அரசின் போக்கை எதிர்க்கும் கொள்கைப் பிடிப்பு மிக்க பெரிய மனிதர்கள் யார், எங்கே இருக்கிறார்கள் என்கிற தகவல்கள். லஷ்கர் என்றில்லாமல், பொதுவாக தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு இருக்கக்கூடும் என்று உளவுத்துறை தயாரித்து அளித்திருந்த பிரகஸ்பதிகளின் முகவரிகள்.

தனியொரு வேட்டைப் படை உருவாக்கப்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் யாரை வேண்டுமானாலும் கைது செய்து அள்ளிக்கொண்டு வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ‘அரெஸ்ட் வாரண்டெல்லாம் வேண்டாம். எல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். நூறு கோழிகளை அமுக்கி வாருங்கள். ஒரு கோட்டான் அகப்பட்டுவிடக் கூடும்.’

அள்ளினார்கள். விழியில் விழுந்து, இதயம் நுழைந்து, சந்தேகாஸ்பதமாகத் தோன்றிய அத்தனை பேரையும் வளைத்துப் பிடித்து விசாரணைக்குக் கொண்டு போனார்கள். இந்த முயற்சிக்கு இறுதியில் வெற்றி கிடைத்தது. துருவித்துருவி விசாரித்ததில் லட்டு மாதிரி ஒரு பெயர் கிடைத்தது. ஆரிஃப். அடடே, நமது செல்போன் கம்பெனி அளித்த பெயரல்லவா?

எனவே, விசாரணை வட்டத்தைக் குறுக்கி, ஆரிஃப் என்கிற பெயரை மட்டும் ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தார்கள். தில்லி வாக்காளர் பட்டியல், தொலைபேசி டைரக்டரியில் இடம்பெற்றிருக்கும் ஆரிஃப்கள் எத்தனை பேர்? அதில் சமத்து ஆரிஃப்கள் எத்தனை சதவிகிதம்? கெட்ட காரியஸ்தர்களாக யார் யாரெல்லாம் இருக்கலாம்?

சல்லடை போடத் தொடங்கினார்கள்.

ஒரு வழியாக ஆரிஃபின் இருப்பிடத்தைப் பற்றிய முதல் டிப் கிடைத்த போது, ஒட்டுமொத்த புலனாய்வுக் குழுவும் ஒரு ரகசிய அறையில் கூடிவிட்டது. ஆபரேஷனில் ஈடுபடப்போகும் அதிகாரிகளுக்கு சிறப்பு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

‘இதோ பாருங்கள், லஷ்கரைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. கையில் சிக்கியிருக்கும் ஒரே பட்சி, இந்த ஆரிஃப் என்கிற அஷ்பக்தான். எந்த ஊர்க்காரர், என்ன மாதிரியான ஆசாமி என்று எதுவும் தெரியாது. அவர் தில்லியில் மறைந்திருக்கிறார். இது ஒன்றுதான் தகவல். மிக மிக கவனமாகச் செயல்படவேண்டிய தருணம் இது. முதலில் அவரது இருப்பிடத்தை வட்டமிட்டுக் கண்காணிக்கவேண்டும். அழிப்பதல்ல, அமுக்குவது ஒன்றுதான் லட்சியம். அவர் நமக்கு உயிருடன் வேண்டும். சிறு அசம்பாவிதமும் கூடாது. கவனம்.’

கிட்டத்தட்ட ஓர் எலி வளை அது. வெளிச்சம் குறைவு. ஒரே தூசு மயம். மூடியிருந்த ஜன்னல்களுக்கு இடையில் சிறு இடைவெளி இருந்தது. அதன் வழியே எட்டிப் பார்த்தார்கள். உள்ளே லூசான டி ஷர்ட் அணிந்து, கவலையா, சிந்தனையா என்று கண்டுபிடிக்க முடியாதபடிக்கு லோகக்ஷேமத்துக்காக ஏதோ தீவிரமாக யோசித்தபடி உலவிக்கொண்டிருந்த மனிதர், கண்ணில் பட்டார். அஷ்பக் என்கிற ஆரிஃப். ‘ஐயா தாங்கள்தானா?’

காவல் படை யோசித்தது. ஆயுதம் வைத்திருப்பாரா? உடன் யாராவது இருப்பார்களா? மறைவாக எங்காவது குண்டு பதுக்கி வைத்திருப்பார்களா? கதவைத் தொட்டால் வெடித்துச் சிதறிவிடுவோமா?

பத்து நிமிடங்கள் அதே இடத்தில் ஆணி அடித்ததைப் போல் நின்றார்கள். யோசித்து யோசித்து மூச்சு விட்டார்கள். சரி நுழையலாம் என்று நினைத்த கணத்தில், உள்ளே சலசலப்பு. பார்வையைக் கூர்மையாக்கி கவனித்தபோது, உள்ளே வேறு ஒரு நபரும் இருப்பது தெரிய வந்தது. யாராக இருக்கும்? கொஞ்சம் முன்னால் நகர்ந்து எட்டிப் பார்த்த அந்த வீரர், அருகில் இருந்த அதிகாரியிடம் கிசுகிசுத்தார். 'சார், பொம்பள சார்!'

'பெண்? லஷ்கர் இ தொய்பாவில் பெண்களும் இருக்கிறார்களா? சரி. மங்களம் உண்டாகட்டும்.' ஒன்று, இரண்டு, மூன்று எண்ணி விட்டு, கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். கோழி அமுக்குவதைப் போல் இருவரையும் அமுக்கினார்கள். ஓர் அதிர்ச்சி? முகத்திலொரு கலவரம்? பயம்? மாட்டிக்கொண்ட பரிதவிப்பு? ம்ஹூம். பாமியான் புத்தர் சிலை மாதிரி புன்னகை தவழ நின்றார்கள். கைது செய்வதற்காகவே காத்திருந்தவர்கள் போல.

விசாரணை ஆரம்பமானது. 'உன் முழுப் பெயர் என்ன? நீ எந்த இயக்கத்தைச் சேர்ந்தவன்? ஏன் செங்கோட்டையைத் தேர்வு செய்தீர்கள்? நீங்கள் எத்தனை பேர்? உங்கள் சூத்திரதாரி யார்? எதற்காக இந்தியா மீது இப்படி கொலை வெறி?'

ஒரு முடிவுடன்தான் இருந்திருக்கிறார்கள். சற்றும் தயங்காமல் பேசத் தொடங்கினார் ஆரிஃப். 'என் பெயர் ஆரிஃப். பாகிஸ்தானைச் சேர்ந்தவன். சிறுவயதிலிருந்தே இந்தியா என்றால் அலர்ஜி. ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறேன். இஸ்லாத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை இருக்கிறது. லஷ்கர் மீது தீவிர வெறியிருக்கிறது. உயிரே போனாலும் பரவாயில்லை என்றுதான் அவர்களிடம் சேர்ந்தேன். என்னிடமிருந்து, வேறு என்ன விவரங்கள் தேவை?'

புலனாய்வு அதிகாரிகளுக்கு ஆச்சரியம். நிறைய மிரட்ட வேண்டும். நிறைய உருட்ட வேண்டும் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால், அநாவசியத்துக்கு உதைபட விரும்பாத ஆரிஃப், கேட்டதும் கேட்காததுமாக ஏராளமான விவரங்களைத் தங்குதடையின்றிப் பொழிந்தார். மாகாளி பராசக்தி, திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்ததும் அவர் தடையற்றுப் பாட ஆரம்பித்தாரே, அந்த மாதிரி. பேசியதில் மிகவும் உருப்படி, சில பெயர்கள். தாக்குதலுடன் தொடர்புடைய வேறு சில பெயர்கள். மத்லூப் ஆலம், நஸிர் அஹமத் காசித். அவர் மகன் ஃபரூக் அஹமத் காசித். பாபர் மொஹ்சில் பகவாலா மற்றும் சதாகா.

ஆரிஃபை உள்ளே வைத்துப் பூட்டி, சாவியை முடிந்துகொண்டு, மற்றவர்களைத் தேடும் பணியை ஆரம்பித்தார்கள். ஆனால், ஆரிஃபை பிடித்ததைப் போல் அத்தனை சுலபத்தில் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. 'அவர்கள் இந்தியாவில் இல்லை, பாகிஸ்தானுக்குத் தப்பிவிட்டார்கள்' என்றனர் சிலர். 'இல்லை, அவர்கள் நேபாளத்துக்குத் தப்பிவிட்டார்கள்' என்றனர் வேறு சிலர்.

ரொம்ப கஷ்டப்பட்டு அங்கே இங்கே தேடித் தேடிப் பறந்து அத்தனை பேரையும் உள்ளே கொண்டு வந்து போட்டபின், ஆரிஃபிடம் மீண்டும் விசாரணையைத் தொடர்ந்தது காவல் படை. லஷ்கரைப் பற்றியும் அவர்கள் செயல்பாடுகள் பற்றியும் இந்தியா ஓரளவுக்கு முழுமையாகத் தெரிந்து கொண்டது அப்போதுதான்.

செங்கோட்டைத் தாக்குதலின் சூத்திரதாரி இந்த ஆரிஃப். பாகிஸ்தானிலேயே பிறந்து வளர்ந்தவர். ஆரம்பத்தில், லஷ்கரில் ஆரிஃப் செய்தது எடுபிடி வேலைகள் மட்டுமே. கொஞ்சம் கொஞ்சமாக ஆயுதப் பரிச்சயம் பெற்று, மேலிடத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, சிறு சிறு தாக்குதல் திட்டங்களில் பங்கெடுக்கத் தொடங்கியிருக்கிறார். நிகரற்ற இந்திய எதிர்ப்புணர்வு என்கிற விஷயம்தான், லஷ்கரில் அவரை ஒரு முக்கியஸ்தர் ஆக்கியிருக்கிறது. அதற்குப் பரிசாகக் கிடைத்ததுதான் செங்கோட்டைத் தாக்குதல் வாய்ப்பு.

ஆரிஃபைப் பொறுத்தவரை அது அவரது முதல் தனியாவர்த்தனத் தாக்குதல் திட்டம். தானே திட்டமிட்டு, செயல்படுத்த உரிய நபர்களைத் தானே தேர்ந்தெடுத்து, பின்னணியில் இருந்து இயக்கினார். இரண்டு பேர் போதும். அதுவே அதிகம். செங்கோட்டைக்குள் புகுந்து கண்ணில் படும் எல்லோரையும் சுடவேண்டும். அந்த இடத்துக்குரிய முக்கியத்துவம் கண்டிப்பாக, செயலின் விளைவை இன்னும் பல மடங்கு அதிகரித்துவிடும். அதுதான் அவருக்கு வேண்டும்.

திட்டம் தயாரானதும், தன் குழுவிலிருந்து இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடம் இதமாகப் பேசி, வெற்றித் திலகமிட்டு அனுப்பிவிட்டார். கதை முடிந்தது. கத்தரிக்காய் காய்த்தது.

ஆனால் ஒரு விஷயம். செங்கோட்டைத் தாக்குதல் என்பது ஆரிஃப் செய்துகொண்டிருந்த பிற காரியங்களோடு ஒப்பிட்டால் பைசா பேறாது. கடும் வேலைகளுக்கு இடையே எழுந்து போய் ஒரு தம்மடித்துவிட்டு வருகிறமாதிரி ஒரு சிறு ரிலாக்சேஷன். அவ்வளவுதான்.

இந்தியாவுக்குள் பிறந்து, வளர்ந்து, படித்து, உத்தியோகம் பார்த்து, பிள்ளை குட்டி பெற்றுப் போட்டு, இந்தியக் குடிமக்களாக வசிப்பவர்களில், இந்திய விரோத மனோபாவம் கொண்டவர்கள் யார் யார் என்று சல்லடை போட்டுச் சலித்துத் தேடியெடுத்துப் பேசிப் பேசி தன் வழிக்குக் கொண்டுவரப் பார்த்ததுதான் ஆரிஃப் செய்துகொண்டிருந்த மிக முக்கியமான காரியம்.

பட்சி படிந்துவிட்டால் தன் இருப்பிடத்துக்கு அழைத்து வந்துவிடுவார். அப்புறம் போதனைகள், உபதேச ரத்தின மாலைகள். லஷ்கர் குறித்த அறிமுகம். வீரப் பிரதாபங்கள். இந்தியாவுக்குள் அவர்களுக்குச் சில இந்திய உளவாளிகள் வேண்டியிருந்தது. அதுதான் ஆரிஃபின் முக்கிய நோக்கம்.

ஆரிஃபிடம் ஒப்படைக்கப்பட்ட மற்றொரு முக்கியப் பணி, ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கடத்துவது. உலகின் எந்தவொரு மூலையில் கிடைக்கும் ஆயுதங்களையும் அநாயாசமாகக் கொண்டு வந்து சேர்க்கும் சாமர்த்தியம் அவரிடம் இருந்தது.

ரெஹ்மானா யூசுஃப் ஃபரூகி. ஆரிஃப் திருமணம் செய்து கொண்ட மாதர்குல மாணிக்கம். கைதான போது உடன் இருந்தாரே, அதே மாணிக்கம். ரெஹ்மானா ஓர் இந்தியர். காதல் திருமணமா, கட்டாயத் திருமணமா என்று தெரியவில்லை. ஆனால், ரெஹ்மானாவும் திருமணத்துக்குப் பிறகு லஷ்கர் ஆதரவாளராகிப் போனார். கைத்தலம் பற்றிய கணவருக்குக் காரியம் யாவிலும் கைகொடுத்துக்கொண்டிருந்திருக்கிறார். செங்கோட்டைத் தாக்குதலுக்குப் போன இரண்டு பையன்களுக்கும் கிளம்புமுன் பிரியாணி சமைத்துப் போட்டதுவரை அப்படியொரு ஒத்தாசை.

ஒரு வழியாக விசாரணை முடிந்து தீர்ப்பு வந்தது. ஆரிஃபுக்கு மரண தண்டனை. மாட்டிய மற்றவர்களுக்கு ஏழு ஆண்டு கடுங்காவல். தாய்க்குலத்துக்கும் சேர்த்துத்தான்.